நல்லூர் இனி நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE "EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆனி 04    (18 - 06 - 1992)    வியாழக்கிழமை    ஒலை: 121

## மாதம் இருமுறை தபால்கள் கொண்டுவர முயற்சி

யாழ். மாவட்டத்திற்கான வெளியூர்த் தபால்களை மாதத்தில் இரண்டு தடவைகள் விசேட கப்பல் மூலம் எடுத்துவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடபகுதிக்கான கப்பல் சேவை மட்டுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மாதத்தில் ஒரு தடவையே மிகக்குறைந்த அளவில் தபால்கள் இங்கு எடுத்துவரப்படுகின்றன. வடபகுதிக்கான தபால்களைக் கூடியளவில் எடுத்து வரவும் இங்கிருந்து கொழும்பிற்கு எடுத்துச் செல்வதற்குமே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுதொடர்பான ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக வடபிராந்திய பிரதித் தபால் மா அதி [4 ஆம் பக்கம் பார்க்க]

# இனப்பிரச்சினை தீர்விற்கு காலஎல்லை நிர்ணயிக்கப்படும்

## அமைச்சர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

"கடந்த பல தசாப்தங்களாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு கால எல்லை நிச்சயிக்கப்படும்" இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா நேற்று செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாட்டில் தொடர்ந்தும் பேசிய அவர்,

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் பாராளுமன்ற தெரிவுக் குழு முன்மொழியும் யோசனைகளுக்கு விசேட முன்னுரிமை அளிக்கப்படும் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறினார்.

அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் எட்டு தமிழ் குழுக்களைச் சந்தித்துப் பேசிய அவர் இதனைத் தெரிவித்ததாக அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா பத்திரிகையாளர்களிடம் விளக்கியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் ஜனாதிபதியின் நிலைப்பாடு அமைச்சரவைக் கூட்டத்தில் விளக்கப்பட்டதாகவும் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பிரட்மன் வீரக்கோன் பேசுகையில் ஜனாதிபதியை சந்தித்த எட்டு தமிழ்க் குழுக்களும் நான்கு அம்ச யோசனை ஒன்றை முன்வைத்ததாகக் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாண இணைப்பு, அதிகாரபரவலாக்கல் வரம்புகள், இவ்விரு மாகாணங்களின் நிர்வாகத்தில் முஸ்லிம்களின் நிலை, வடகிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களின் உரிமைகள் என்பவற்றை உள்ளடக்கியதாகவே இவ் யோசனைகள் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இராணுவச் சீருடையில் மலையகத்தில் கொள்ளை

(மாத்தளை)

மாத்தளை உட்பட மலையகத்தின் சில பகுதிகளில் மீண்டும் இராணுவச் சீருடை போன்று அணிந்து வரும் கொள்ளையர்களது நடவடிக்கை அதிகரிக்கத் தொடங்கி இருப்பதாக பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மாத்தளை மாவட்டத்தில் இது போன்ற சம்பவங்கள் அடிக்கடி இடம் பெற்று வருவதாகவும் மாத்தளைப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மலையகத்தில் அடிக்கடி அமைதியை குலைக்கும் முகமாகவே இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெறுகின்றது என்று தொழிற்சங்கங்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

## இளைஞனைக் கடத்திய இலங்கைக் குழுவை கனடா பொலிஸ் தேடுகிறது

(றொறன்ரோ)

கனடாவில் தமிழர்கள் இருவர் பங்கு தாரர்களாக இருக்கும் வீடியோக் கடை ஒன்றை கொள்ளையிட்டு அங்கிருந்த இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்ற இலங்கைக்குழுவை பொலிசார் தேடி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடத்திச் செல்லப்பட்ட பத்தொன்பது வயது இளைஞன் கண்டுபிடிக்கப்பட்டான் என்றும், மூன்று கார்களில் இரவு நேரம் வந்த பத்துப் பேர் கடை யன்னல்களை அடித்து நொறுக்கி பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்கள், சிறுவர்கள் வவுனியாவில் தடுத்துவைப்பு

## பாராளுமன்ற தெரிவுக் குழு சில தினங்களுக்குள் கூடலாம்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச் ... கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து சுதந் ... சிறிலங்கா ஜனாதிபதியை தமிழ்க் குழுக்கள் சந்தித்துப்

## சி.பி.ஐ. சட்டவல்லுனர் குழு விரைவில் கொழும்பு வரும்

தலைவர் பிரபாகரன் மற்றும் பொட்டம்மான் ஆகியோரை இந்தியாவிடம் ஒப்படைக்கும்படி இந்திய அரசு உத்தியோக பூர்வமாக வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும், இது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் தீவிர பரிசீலனை மேற்கொண்டு வருவதாகவும் சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கூறியுள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், இவ் வேண்டுகோள் சென்ற வாரம் அரசுக்கு கிடைத்திருப்பதாகவும், மேலும் அதிகாரிகள் தூதுக்குழுஇரண்டு கொழும்பு வருவதற்கு இந்தியா அனுமதி கோரியிருப்பதாகவும், இவற்றிற்கு விசா வழங்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்தார்.

## கோட்டை ரயில்நிலையத்தில் சிவில் உடையில் பொலிஸ்

(கொழும்பு)

கோட்டை ரயில் நிலையத்தில் சாதாரண உடை அணிந்த வண்ணம் பொலிசார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாதம் 6 ஆம் திகதி கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து சி ஐ டி. எனக் கூறி பயணி ஒருவரிடம் இருந்து 90,000 ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்தச் சேவை தினமும் மாலை 6 00 மணிமுதல் இரவு 11 30 மணிவரை நடைபெறுகின்றது என்றும், இதற்கான உத்தரவினை நகர பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஏ. எஸ் செனிவரெத்தினா விடுத்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

சி. ஐ டி. என்று கூறி யாராவது வந்தால் அதனை உடனடியாக ரயில் நிலைய அதிபரின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கோட்டைப் பொலிசார் கேட்டுள்ளனர்.

## தீவகத்தில் வயோதிபர்கள் வைத்தியவசதியின்றி அவதி

தீவகப்பகுதிகளில்சிறிலங்கா இராணுவச் சுற்றி வளைப்பில் சிக்குண்ட வயோதிபர்களில் பலர் போதிய பராமரிப்பு மற்றும் மருத்துவ வசதிகளின்றி இறந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீவகப்பகுதிகளைசிறிலங்கா இராணுவத்தினர்சுற்றி வளைத்து ஒரு வருடமாகியும் அங்கு சிக்கியுள்ள பலர் இன்றுவரை மீட்கப்பட முடியாத நிலையில் இருப்பது தெரிந்ததே.

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குள் சிக்கியுள்ள 600 பேரில பெரும்பாலோர் வயோதிபர்கள். இவர்களுக்கு போதிய உணவு, பராமரிப்பு, மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படாததால் இவர்கள் உடல்நிலை மோசமடைந்திருப்பதாகவும் சிலர் மருத்துவ வசதியின்றி இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [ச]

இளைஞனைக் கடத்திய

## இலங்கைக் குழுவை கனடா பொலிஸ் தேடுகிறது

(றொறன்ரோ)

கனடாவில் தமிழர்கள் இருவர் பங்குதாரர்களாக இருக்கும் வீடியோக் கடை ஒன்றை கொள்ளையிட்டு அங்கிருந்த இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்ற இலங்கைக்குழுவை பொலிசார் தேடி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடத்திச் செல்லப்பட்ட பத்தொன்பது வயது இளைஞன் கண்டுபிடிக்கப்பட்டான் என்றும், மூன்று கார்களில் இரவு நேரம் வந்த பத்துப் பேர் கடை யன்னல்களை அடித்து நொறுக்கி பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்கள், சிறுவர்கள் வவுனியாவில் தடுத்துவைப்பு

(வவுனியா)

தாண்டிக்குளம் பாடசாலை தடை முகாமில் சிறுவர்கள், பலரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது

வட பகுதி நோக்கி தடை செய்யப்பட்ட பொருள்கள் கொண்டு செல்ல முயன்றனர் என்ற காரணத்திற்காகவே இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் பாடசாலை மாணவர்கள் மீதும் இராணுவ உளவாளிகளின் பார்வை விழுந்திருப்பதாகவும் அறியப்பட்டது

சந்தேகத்திற்குரியவர்கள் என்று காரணம் கூறப்பட்டு ஏராளமான மாணவர்கள் பல நாட்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது. (தி)

## பால் குடிக்க விரும்பி கிருமிநாசினி பருகிய சிறுமி

(பண்டாரவளை)

பால் குடிக்க ஆசைப்பட்ட ஏழுவயது சிறுமி பால் போன்ற வெள்ளை நிறமாக காட்சி அளித்த அன்டரகோல் கிருமி நாசினியை அருந்தி மரணமடைந்துள்ளார்.

நெஞ்சை உருக்கும் மேற்படி சம்பவம் பண்டாரவளை பனங்கெலடகல் வகுவத்த என்ற இடத்தில் இடம் பெற்றது

ஏழைத் தொழிலாளியான சே சுப்பிரமணியம் என்பவரின் புதல்வியான சித்திராதேவி எனும் இச்சிறுமி தாயாரிடம் பால் குடிப்பதற்கு ஆசையாக இருப்பதாகவும் பால்மா வாங்கித் தரும்படியும் கேட்டு வந்தாராம் எனினும் தாயின் கஷ்ட நிலை காரணமாக வாங்கிக்கொடுப்பதற்கு வசதியற்ற தாய் காசுகிடைக்கும் போது வாங்கித்தருவதாக கூறி வந்தாராம்.

சம்பவ தினம் சிறுமியின் பெற்றோர் வேலைக்குச் சென்றதும் வீட்டிலிருந்த போத்தலொன்றில பால் போன்று வெள்ளையாக தென்பட்ட அன்டரகோலை பால் என்று

[4 ஆம் பக்கம் பார்க்க]

தனியார் போக்குவரத்து

## ஊழியர் வேலை நிறுத்தம் அரசு எச்சரிக்கை

(கொழும்பு)

தற்போது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவரும் தனியார் போக்குவரத்து ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை கைவிட்டு இன்று முதல் வழமைபோல் சேவையில ஈடுபடாவிட்டால் அவர்களது பாதை அனுமதிப் பத்திரம ரத்துச் செய்யபபடும் என்று அரசு அறிவித்துள்ளது.

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் சாதாரண சிவில் உடை தரித்த பொலிசார் திடீர் சோதனைகளை நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த பதினைந்தாம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் தனியார் போக்குவரத்து பஸ்கள் ஈடுபட்டுள்ளன.

பாணந்துறை, மொறட்டுவை, களுத்துறை ஆகிய இடங்களில் ஆரம்பித்த வேலைநிறுத்தம் நேற்று மேல் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியது.

இந்த வேலை நிறுத்தத்தில் கொழும்பு உட்பட மேல்மாகாணத்தில போக்குவரத்து சேவைகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் பாராளுமன்ற தெரிவுக் குழு முன் மொழியும் யோசனைகளுக்கு விசேட முன்னுரிமை அளிக்கப்படும் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறினார்

அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் எட்டு தமிழ் குழுக்களைச் சந்தித்துப் பேசிய அவர் இதனைத் தெரிவித்த பத்திரிகையாளர்களிடம் விளக்கியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் ஜனாதிபதியின் நிலைப்பாடு அமைச்சரவைக் கூட்டத்தில் விளக்கப்பட்டதாகவும் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பிரட்மன் வீரக்கோன் பேசுகையில் ஜனாதிபதி யோசனை ஒன்றை முன்வைத்ததாகக் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாண இணைப்பு, அதிகாரபரவலாக்கல் வரம்புகள், இவ்விரு மாகாணங்களின் நிர்வாகத்தில் முஸ்லிம்களின் நிலை, வடகிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களின் உரிமைகள் என்பவற்றை உள்ளடக்கியதாகவே இவ் யோசனைகள் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பயணி ஒருவரிடம் இருந்து 90,000 ரூபாய் களவாடப்பட்டதைத் தொடர்ந்தே பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டுள் வது வந்தால் அதனை உடனடியாக ரயில் நிலைய அதிபரின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கோட்டைப் பொலிசார் கேட்டுள்ளனர்.

## பாராளுமன்ற தெரிவுக் குழு சில தினங்களுக்குள் கூடலாம்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு எதிர்பார்ப்பதற்கு முன்னதாகவே கூடும் எனவும், இக் கூட்டம் அடுத்த சில நாட்களுக்குள் நடைபெறலாம் எனவும் பி.பி.ஸி நேற்றிரவு தெரிவித்தது

பாராளுமன்றத்தில் அரசாங்கக் கட்சிக்கும், எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து சுதந்திரக்கட்சி பகிஷ்கரித்திருந்தது தெரிந்ததே. இதைத் தொடர்ந்து பாராளுமன்றத் தெரிவுக் குழு கூட்டம இடம் பெறமுடியாத நிலை ஏற்பட்டது.

தற்பொழுது சுதந்திரக்கட்சி தனது பகிஷ்கரிப்பைக் கைவிட்டதினால், விரைவில் பாராளுமன்றத் தெரிவுக் குழுகூடலாம என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதே வேளை, கொழும்பில் சிறிலங்கா ஜனாதிபதியை தமிழ்க் குழுக்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியமையும் இப் பாராளுமன்றத் தெரிவுக்குழு விரைவில கூடுவதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே 20-ம் திகதிக்கு பின்னரே பாராளுமன்றத் தெரிவுக்குழு கூடவுள்ளதென அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இராணுவத் தாக்குதல் தொடர்ந்தால்

## யாழ். குடாநாடு முழுவதும் அகதிமுகாமாக மாறிவிடும்

### யாழ். அரச அதிபர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

''யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இராணுவத்தினரது தாக்குதல்கள் தொடர்ந்தும் நடைபெறுமேயானால் குடாநாடுமுழுவதும் ஒரு அகதிகள் முகாமாக மாறிவிடும்''

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார் நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர்சந்திப்பின்போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளால் ஏற்கனவே ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து அகதிகளாக உள்ளனர். மாவட்டத்தின் ஒரு பகுதியில் இராணுவத் தாக்குதல்கள் இடம் பெறும் போது மக்கள் அப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வேறொரு பகுதிக்குச் செல்கின்றனர் எல்லாப் பகுதியிலும் இராணுவத் தாக்குதல்கள் இடம் பெற்றால் மக்கள் அனைவரும் இடம்பெயரும் நிலை உருவாகும். அப்படியான நிலையில் யாழ். குடாநாடு ஓர் அகதிமுகாமாக மாறிவிடும் என்றும் அவர் தெரிவித்தார். (க), (ச), (பா

## தெல்லிப்பழையில் கண்ணிவெடி; 'டிரக்' வண்டி சிக்கி சிதறியது

### ஒரு சிப்பாய் பலி; மூவர் காயம்

[யாழ்ப்பணம்]

தெல்லிப்பழையில் இராணுவ 'ட்ரக்' ஒன்று புலிகளின் கண்ணிவெடியில சிக்குண்டு சிதறியது

இந்தச் சம்பவத்தில் இராணுவ தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டாரெனவும் மூன்று பேர் படுகாயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

தெல்லிப்பழை பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டபோது படையினர் இதில் சிக்கியதாகக் கூட்டுப்படைத்தலைமையகத்தைச் சேர்ந்த கேணல் சரத் முனசிங்கா செய்தியாளர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டார்.

## தீவகத்தில் வயோதிபர்கள் வைத்தியவசதியின்றிஅவதி

தீவகப்பகுதிகளில்சிறிலங்கா இராணுவச் சுற்றி வளைப்பில் சிக்குண்ட வயோதிபர்களில் பலர் போதிய பராமரிப்பு மற்றும் மருத்துவ வசதிகளின்றி இறந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீவகப்பகுதிகளைசிறிலங்கா இராணுவத்தினர்சுற்றி வளைத்து ஒரு வருடமாகியும் அங்கு சிக்கியுள்ள பலர் இன்றுவரை மீட்கப்பட முடியாத நிலையில் இருப்பது தெரிந்ததே.

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குள் சிக்கியுள்ள 600 பேரில பெரும்பாலோர் வயோதிபர்கள். இவர்களுக்கு போதிய உணவு, பராமரிப்பு, மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படாததால் இவர்கள் உடல்நிலை மோசமடைந்திருப்பதாகவும் சிலர் மருத்துவ வசதியின்றி இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [ச]

இடம் பெயர்ந்த மக்களுக்கு

## நிவாரணத்தை அனுமதிக்க அரச அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கு தொடர்ச்சியான உலர உணவு வகைகளை வழங்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது

மேற்படி பகுதிகளில இருந்து சுமார் 5200 குடும்பங்கள் அண்மைய இராணுவ நடவடிக்கைகளினால இடம் பெயர்ந்துள்ளனர் இக்குடும்பங்கள் மீண்டும தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இதனால் இக்குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் உலர் உணவு நிவாரண விநியோகத்தைத் தொடர்ந்தும வழங்க வேண்டும் என்றும், இதற்கான அனுமதியை அளிக்கும் படியும கேட்டு யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திரு. கிருஷ்டிசில்வாவுக்கு அவசர செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

மேற்படி அமைச்சின செயலாளரிடம இருந்து மேறபடி

[4 ஆம் பக்கம பார்க்க]

## வீரச்சாவு



2ஆம் லெப். செம்பியன்



வீரவேங்கை அறிவழகன்

கடந்த திங்கட்கிழமை ஊர்காவற்றுறையில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் 1-ம் வட்டாரம் புங்குடுதீவைச் சேர்ந்த 2ஆம லெப்டினன்ட செம்பியன் (சுபாஸ்-பிரான்சிஸ் றொபின்சன்), இலந்தமோட்டை மன்னார் தீவைச் சேர்ந்த வீரவேங்கை அறிவழகன் ஜேசப் வின்சன்) ஆகியோர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

இவ்விரு வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# வரி விளம்பரம்

## மஹோற்சவம்

கந்தர்மடம் பழம் வீதி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் 19 ஆம் திகதி ஆரம்பமாகிறது 29 ஆம் திகதி மாலை தேர், 30 ஆம் திகதி பகல் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

வை. கருணாகரேஸ்வரக்குருக்கள்

[சி-2689]

## "மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்,.

மீரா வெளியீடு. சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய இந்த நாவல்... துன்பங்களும் சோதனைகளும் தொடர்ந்து வந்தபோதும் தளராத மன உறுதியுடன் இந்த மண்ணை நேசித்து மானமுடன் தலை நிமிர்ந்து வாழமுனையும் ஒரு குடும்பத்தின் கதை.விற்பனையாகிறது. (2691)

## உதைபந்தாட்டம்

உருப்பராய் ஒஸ்கா விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று நடைபெறும்.

பாடும்மீன் (B) அணியை எதிர்த்து கிறீன்பீல்ட் அணி கோண்டாவில் குமரன் மைதானத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 30 மணியளவில் விளையாடவுள்ளது.

(2695)

## நல்லின கால்நடை வளர்ப்பு ஊக்குவிப்பு

நல்லின கால்நடை வளர்ப்பினை ஊக்குவிக்குமுகமாக செயற்கை முறைச்சினைப்படுத்தல் மூலம் இனவிருத்திசெய்யப்பட்ட நல்லின கால்நடைகளைப் பெற்று, கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களூடாக வழங்குவதற்கென திட்டம் ஒன்றினை யாழ். மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 6 18 மாதங்களுடைய நாம்பன் மாடுகள் வாங்கப்பட்டு,சிறந்த பராமரிப்பின் கீழ் வளர்க்கப்பட்டு அவை மீள கால்நடை வளர்ப்பாளர்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளன.

## தமிழ்ப் பெயர்கள் சிங்களத்தில் பதிவு

மஸ்கெலியா பகுதியில் பெரும்பான்மையாக தமிழ்மக்கள் வாழ்ந்து வந்தாலும் இங்குள்ள பொது வைத்திய சாலையில் பிறக்கும் குழந்தைகளுக்கு சிங்களமொழியில் தான் பெயர்பதிவு செய்யப்படுகிறது.

---

# காணவில்லை

பெயர் மோகன், வயது - 11, நிறம் கறுப்பு கட்டையான தோற்றம் இவரை கடந்த 15 - 06 - 1992 இல் இருந்து காணவில்லை. தகவல் கொடுப்போர் கீழேயுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

கிறேஸ் பாலச்சந்திரன்.
பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம் அல்லது
32, பழம்றோட், கந்தர்மடம்

தகவல். கிறேஸ்பாலச்சந்திரன்.

(2693)

---

## யாழ்ப்பாண மாநகரசபை
### டிராக்டர் கொள்வனவுக்கான
# கேள்வி அறிவித்தல்

பரவனையிலுள்ள பெட்டியுடன் கூடிய டிராக்டரைக் கொள்வனவு செய்வதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட விற்பனை விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படக்கூடியபிணைப்பணமாக ரூபா 500/- உம்,மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 50/- உம் செலுத்தப்படுவதன் பேரில் 01-07-1992 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை எம்மால் வழங்கப்படும் கேள்விப்படிவங்களிலேயே விற்பனை விலைகள் குறிப்பிடப்பட்டு 03-07-1992 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் மாநகரசபை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகச் சேர்க்கப்படுதல் வேண்டும். கேள்விகள் அதேதினம் பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை மாநகரசபையின் மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 16-06-1992 [சி-4566]

---

# சர்வதேச கூட்டுறவு தின விழா
## 11-07-1992

புங்குடுதீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை,
வேலணை ப. நோ. கூ. சங்கங்கள்
வேலணை தெ ப.பொருள் உ.வி.கூ. சங்கம்
இணைந்து நடாத்தும் யாழ். மாவட்ட
கூட்டுறவுச்சபையின் தீவகக்கோட்ட மட்ட
சர்வதேச கூட்டுறவுதின விழா

இடம்:- யாழ். இந்துமகளிர் கல்லூரி மண்டபம் யாழ்ப்பாணம்.

காலம்:- 11-7-92 சனிக்கிழமை பி. ப. 2-00மணி

மேற்படி விழாவை முன்னிட்டு

---

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
## யாழ். கிளை, தலைமையகம்
# தோல் பதனிடும் உத்தியோகத்தர்

எமது பணிமனையில் தோல் பதனிடும் உற்பத்தியை திறம்பட நடைமுறைப்படுத்தக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பட்டதாரி, தொழில்நுட்ப உத்தியோகத்தர் (N,D.T) அல்லது அதற்கு சமமான கல்வித் தராதரம், தகைமை, அனுபவம் ஆற்றல் ஆர்வம் உள்ளோரிடமிருந்தும், உள்ளூரிலேயே கடமை புரியக் கூடியவர்கள் விரும்பப்படுவர்.

விண்ணப்பங்கள் யாவும் 25 - 06 - 1992 க்கு முன் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். நேர்முகப் பரீட்சை 27- 06 -1992 முற்பகல் 10 00 மணிக்கு நடைபெறும். தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

73, கண்டி வீதி
யாழ்ப்பாணம் கௌரவ செயலாளர்
16 - 06 - 1992

(சி/ 4572]

---

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)
# உட்துறைக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடம்

மேற்காட்டிய பதவிக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு அல்லதுகணக்காய்வு லிகிதர் பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவமும் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்கியல் சம்பந்தமான துறையிலான பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

(ஆ) ஐக்கிய இராஜ்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடை நிலைப்பரீட்சையில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் சம்பந்தமான துறையிலான பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்,

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர (உயர் தரம்) / க. பொ. த. (உயர்தரம்) தில் கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட மூன்று பாடங்களிலான சித்தியும். அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் துறையிலான பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

வயதெல்லை:- 21 - 40 வரை. கூட்டுறவுச் சங்கத்தில் வேலை செய்வோருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

சம்பளம்:- குறி எண்; 105 / 09
1205 - 40 X 5 - 50 X 10 - 1905
இத்துடன் கூ. ஆ. குழுச் சுற்று நிருபத்திற்கு அமையச் சகல படிகளும் வழங்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 30- 06 -1992 அன்று அல்லது அதற்குமுன்பு கிடைக்க

---

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
## யாழ். கிளை தலைமையகம்
# தோல் பதனிடுந் தொழிலாளர்

மேற்படி எமது பணிமனையில் தோல் பதனிடும் பயிற்சிநெறி இலவசமாக நடாத்தப்படவுள்ளது.

பயிற்சிநெறி பயில விரும்பும் ஆற்றலும், அனுபவமும் தகுதியும் உள்ளோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.விண்ணப்பங்கள்யாவும் 23-06-92க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். நேர்முகப் பரீட்சை 24 06 92 காலை 10-00மணிக்கு நடைபெறும். தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

ச. சிவானந்தராசா
73, கண்டிவீதி. கௌரவசெயலாளர்
யாழ்ப்பாணம்
16-06-92

(சி/457)

---

# நினைவு கூருகின்றோம்...
## 1992-06-18

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

விசாகன [கல்லடி, மட்டக்களப்பு]

தேவராஜ் [இன்ஸ்டன்ட் சில்வஸ்ரர் ஆனந்தலம்பேட் -பெரியபண்டிவிரிச்சான், மன்னார்.]

லெப். ரவியப்பா [சோதிலிங்கம் யோகலிங்கம் - சுங்க இலாகா ஒழுங்கை, தீருவில், வல்வெட்டித் துறை]

2 ம் லெப். மணிமாறன் [கதிரிப்பிள்ளை பால சுப்பிரமணியம் - சிவபுரவீதி, வல்வெட்டித்துறை]

2-ம் லெப். ஆனந்தப்பா [கந்தசாமி சண்முகானந்தன் - காட்டுப்புலம், வல்வெட்டித்துறை]

2-ம் லெப். ரகீம் மாஸ்ரர் [தம்பையா கிருஸ்ண மூர்த்தி - சிந்தனை, வல்வெட்டித்துறை]

சித்தப்பா [சின்னத்துரை கணேசதாசன் - அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.]

சேரன் [சரவணமுத்து சிறி சர்வானந்தா - தீருவில், வல்வெட்டித்துறை.]

சியாம் [அந்தோனிப்பிள்ளை யேசுராசா - 3 ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை]

சூரி (வேலுப்பிள்ளை ரவி - அரசர்கேணி, பளை.)

2-ம் லெப். அலிப் (சிறிஸ்கந்தராஜா பாஸ்கரன்- ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை.)

ஞானி (சுப்பிரமணியம் கஜேந்திரமூர்த்தி - பொன்னாதோட்டம் வல்வெட்டித்துறை)

இதே சம்பவத்தின்போது வீரச்சாவெய்திய நாட்டுப் பற்றாளரான

பிக்கப் ரவி (வல்வெட்டித்துறை)

1987 ஆம்ஆண்டு திருக்கோணமலை குடைக்குடாப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

லெப். கார்த்திக் (ஐயாத்துரை சிறிதரன் - 7 ஆம்

னைப் பெற்று, கால்நடை வள ர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்க ளூடாக வழங்குவதற்கென திட்டம் ஒன்றினை யாழ். மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 6 18 மாதங்களுடைய நாம்பன் மாடுகள் வாங்கப்பட்டு, சிறந்த பராமரிப்பின் கீழ் வளர்க்கப் பட்டு அவை மீள கால்நடை வளர்ப்பாளர்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளன.

## தமிழ்ப் பெயர்கள் சிங்களத்தில் பதிவு

மஸ்கெலியா பகுதியில் பெரும்பான்மையாக தமிழ்மக்கள் வாழ்ந்து வந்தாலும் இங்குள்ள பொது வைத்திய சாலையில் பிறக்கும் குழந்தைகளுக்கு சிங்களமொழியில் தான் பெயர்பதிவு செய்யப்படுகிறது.

தமிழ், ஆங்கில மொழிகளில் நிரப்பப்படும் விண்ணப் பங்கள் திருப்பி அனுப்பப்படுவதாகவும் பொதுமக்களினால் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் தேசிய மொழிகளில் ஒன்றாக தமிழ் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் தமிழில் விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படாதிருப்பதும் தமிழில் பிறப்புச்சாட்சிப்பத்திரங்கள் வழங்கப்படாதிருப்பதும் வேதனைக்குரிய விடயம் எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அங்குள்ள பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

---

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் வெளிவாரிப்பட்டப் படிப்பு கலை/வர்த்தக முதற் கற்கை நெறிகள்

## இலங்கை ஆய்வியல்

இலங்கை ஆய்வியல் கற்கை நெறிக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள உசாத் துணை நூல்களில் ஒன்றான ''பேராசிரியர் நித்தியானந்தனால்'' எழுதப்பட்ட ''இலங்கை அரசியற் பொருளாதார அபிவிருத்தி'' (1948- 1956). கலைப் பீடாதிபதி அலுவலகத்தில் விற்பனைக்குண்டு. (விலை 150/-)

பதிவாளர்.

(சி 4565)

---

## சர்வதேச கூட்டுறவு தின விழா 11-07-1992

புங்குடுதீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை, வேலணை ப. நோ. கூ. சங்கங்கள் வேலணை தெ ப.பொருள் உ.வி.கூ. சங்கம் இணைந்து நடாத்தும் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபையின் தீவகக்கோட்ட மட்ட சர்வதேச கூட்டுறவுதின விழா

இடம்:- யாழ். இந்துமகளிர் கல்லூரி மண்டபம் யாழ்ப்பாணம்.

காலம்:- 11-7-92 சனிக்கிழமை பி. ப. 2-00மணி

மேற்படி விழாவை முன்னிட்டு பின்வரும் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

கோட்ட மட்ட போட்டி நிகழ்ச்சிகள்

1. பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள்:
   - அ. பேச்சுப்போட்டி,
   - ஆ. கட்டுரைப் போட்டி,
   - இ. வினாடி வினாப் போட்டி,
   - ஈ. பொது அறிவுப் போட்டி,
2. அங்கத்தவர்களுக்கான போட்டிகள்:
   - அ. பேச்சுப்போட்டி,
   - ஆ. கட்டுரைப் போட்டி,
   - இ. நாடகப்போட்டி,
   - ஈ. வினாடிவினாப் போட்டி,
   - உ. விளையாட்டுப் போட்டி.
3. பணியாளர்கட்கான போட்டிகள்:
   - அ. பேச்சுப்போட்டி,
   - ஆ. கட்டுரைப்போட்டி,
   - இ. விளையாட்டுப்போட்டி,
4. பணிப்பாளர் சபைக்கான போட்டிகள்;
   - அ. கயிறு இழுத்தல் போட்டி,
   - ஆ. 100மீற்றர் ஓட்டப்போட்டி,

போட்டியில் பங்குபற்றும் அனைவரும் 27.6.92ம் திகதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு தங்கள் பகுதி ப.நோ.கூ சங்கங்களின் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. போட்டிகள் நடைபெறும் திகதி விபரம்:
   - அ. விளையாட்டுப் போட்டி - 2 7 92, 3.7 92யாழ் மத்திய கல்லூரி,
   - ஆ. ஏனைய போட்டிகள்-4 . 7 .92 யாழ்வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும்.
6. தீவகத்தில் சகல கூட்டுறவாளர்களும், சங்க அங்கத்தவர்களும், பணியாளர்களும், பொது மக்களும், இக்கூட்டுறவாளர் தினவிழாவை சிறப்புற நடாத்தி பங்குபற்றி ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அனுப்பும் முகவரி:
செயலாளர்,
சர்வதேச கூட்டுறவுதின விழாக் குழு,
தீவகக் கோட்டம்,
வேலணை ப. நோ. கூ. சங்கம்
கோணாந்தோட்டம்.
யாழ்ப்பாணம்.

தலைவர்,
சர்வதேச கூட்டுறவுதின விழாக்குழு,
தீவகக்கோட்டம்,
1992-06-16,

[சி/4564]

---

(ஆ) ஐக்கிய இராஜ்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடை நிலைப்பரீட்சையில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் சம்பந்தமான துறையிலான பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர (உயர் தரம்) / க. பொ. த. (உயர்தரம்) தில் கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட மூன்று பாடங்களிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் துறையிலான பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

வயதெல்லை:- 21 - 40 வரை. கூட்டுறவுச் சங்கத்தில் வேலை செய்வோருக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது.

சம்பளம்:- குறி எண்; 105 / 09
1205 - 40 X 5 - 50 X 10 - 1905
இத்துடன் கூ. ஆ. குழுச் சுற்று நிருபத்திற்கு அமையச் சகல படிகளும் வழங்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 30- 06 -1992 அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக ''தலைவர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், சங்கானை'' என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால்மூலமும் அல்லது நேரடியாகவோ அனுப்பப் படல் வேண்டும்.

தலைவர்
சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்
17 - 06 - 1992

(சி/ 4567)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 28-07-1974

மறைவு 18-05-1992

## செல்வன். செ. ரசினிமால்

பாடசாலை மாணவனாய்ப் பவனி வந்த நாட்களில்
நீ படைத்த சாதனைகள் எத்தனை
உயர்தர மாணவர் ஒன்றியத்தில்
உன்குரல் ஒலிக்குதடா
பொது வேலை என்றால் புது உணர்வு பிறக்கும்
அயராது நின்று நீ உழைத்தாய்
விளையாட்டுத் துறையிலும் வல்லவன் நீ என்று
சளையாது சான்றுகள் பெற்றாய்
பல்கலைக் கழகத்தின் நுழைவாயில் தன்னைச்
செல்லுநாள் எண்ணியே பார்ப்பாய்.
செஞ்சிலுவைச் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுநீ
ஆற்றவோ சென்றாய் நீ சேவை
கூற்றவன் ஷெல் எனவே வந்துன்னைக் கூவியே
அழைத்திட
சடுதியாய் வந்ததோ சாவு.

அதிபர்
ஆசிரியர்கள், மாணவர்கள்
முல்லைத்தீவு மகாவித்தியாலயம்.

(2675)

---

2-ம் லெப். ரகீம் மாஸ்ரர் [தம்பையா கிருஸ்ணமூர்த்தி - விந்தனை, வல்வெட்டித்துறை]

சித்தப்பா [சின்னத்துரை கணேசதாசன் - அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.]

சேரன் [சரவணமுத்து சிறி சர்வானந்தா - தீருவில், வல்வெட்டித்துறை.]

சியாம் [அந்தோனிப்பிள்ளை யேசுராசா - 3 ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை]

சூரி (வேலுப்பிள்ளை ரவி - அரசர்கேணி பளை.)

2-ம் லெப். அலிப் (சிறிஸ்கந்தராஜா பாஸ்கரன்- ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை.)

ஞானி (சுப்பிரமணியம் கஜேந்திரமூர்த்தி - பொன்னா தோட்டம் வல்வெட்டித்துறை)

இதே சம்பவத்தின்போது வீரச்சாவெய்திய நாட்டுப் பற்றாளரான

பிக்கப் ரவி (வல்வெட்டித்துறை)

1987 ஆம்ஆண்டு திருக்கோணமலை சூடைக்குடாப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் வீரச்சாவெய்திய -

லெப். கார்த்திக் (ஐயாத்துரை சிறிதரன் - 7 ஆம் வட்டாரம், சம்பூர், திருக்கோணமலை.)

1989 ஆம்ஆண்டு கொல்லங்கலட்டியில் தேசவிரோத சக்திகளினாற் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மகன்.

1990 ஆம் ஆண்டு எதிர்பாராத விதமாகத் துப்பாக்கி வெடித்ததில் எம்மைப் பிரிந்த -

ஜினேந்திரன் (இருதயபுரம்)

மாங்குளத்தில் சிறிலங்காப் படையினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

மஜீத் (முகமது இஸ்காக்கூப் சேக் அலி - மீராஓடை, மட்டக்களப்பு)

இதே ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

இளங்கோ (திருக்கோணமலை)

வவுனியா வயிரவப் புளியங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

மேஜர் தயாபரன் (கனகசபை சிறீகரன் - இராசேந்திரன் குளம், வவுனியா.)

முல்லைத்தீவு கொக்காவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

நிர்மலன் (கந்தையா ரமேஸ் கந்தராசா - முரசுமோட்டை, கிளிநொச்சி.)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மத்திய முகாம் 4 ஆம் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 2 தமிழ் இளைஞர்கள்.

மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட வாழைச்சேனை கண்ணகிபுரத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

திருக்கோணமலை சீனன்குடாப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 80 க்கும் மேற்பட்ட தமிழர்கள் மற்றும் 13 ஆம் கட்டை பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு வவுனியா நேரியாமோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். கஸ்ரோ (குமாரலிங்கம் விமலராசா- 4 ஆம் கட்டை, அளம்பில், மணலாறு.)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4563)

### சிந்தனைக்கு

அவமதிப்புக்கு ஆளாகத் தன்னை அனுமதிப்பவன் அவமதிப்புக்கு அருகதை உடையவனே ஆவான்.

— பியேர் கொர்னேய்ல்


# ஈழநாதம்

61, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 18-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 25


## சமாதான கதவை அரசு மூடிவிட்டது

"இலங்கையின் இனப் பிரச்சினைக்கான மொத்தத் தீர்வின் ஒரு பகுதியாக வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட முடியாது." இவ்வாறு கொழும்பில் தன்னைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய தமிழ்க் குழுக்களிடம் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். இதனை, திரு பிரேமதாசாவின் அரசாங்கம் சமாதானத்திற்கான கதவை முற்றாக மூடிவிட்டதாகவே கொள்ளலாம்.

திரு. பிரேமதாசாவின் இவ் அறிவிப்பின் மூலம், தமிழரின் தேசிய இனப் பிரச்சினையில் சிங்கள அரசாங்கத்தினதும், ஐக்கிய தேசியக் கட்சியினதும் நிலைப்பாடு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றே கொள்ள வேண்டும்.'

இனப் பிரச்சினைக்கான தீர்வின் ஒரு பகுதியாக வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஓர் அரசியல் அலகை உருவாக்கப் பேரினவாத சிங்கள ஆட்சியாளர்கள் அனுமதிக்கப் போவதில்லை என்பதை அடிக்கடி இப்பகுதியில் சுட்டிக் காட்டி வந்துள்ளோம். நேற்றுக் கூடத் "தமிழர் தாயகத்தை"ச் சிதைத்தல் ஒன்றே சிறிலங்கா அரசாங்கத்தின் நோக்கம் என்பதைக் குறிப்பிட்டிருந்தோம்.

வடக்கு கிழக்கு இணைப்பிற்கு பிரேமதாசா அரசாங்கம் எப்பொழுதுமே பச்சைக் கொடி காட்டியதில்லை. இருப்பினும் அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டத்தையும், சமாதான முயற்சிகளுக்கான நடவடிக்கைகளையும் பிரேமதாசா அரசாங்கம் முடக்கியபோதே வடக்கு - கிழக்கு இணைப்பை எக்காரணம் கொண்டும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கப் போவதில்லை என்பது திட்டவட்டமாகத் தெரிய வந்தது.

மேலும் வடக்கு - கிழக்கு இணைப்பு ஏற்படுத்தப்பட மாட்டாது என்ற சிறிலங்கா ஜனாதிபதியின் அறிவிப்பானது இனப்பிரச்சினை குறித்து அரசாங்கத்தின் அணுகுமுறை எவ்வாறு இருக்கும் என்பதையும் தெளிவாக வெளிக்காட்டியுள்ளது. ஒருபுறம் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை. மறுபுறம் இனப்பிரச்சினைத் தீர்விற்கான அரசியல் அணுகுமுறை என்று இதுவரை கூறிவந்த பிரேமதாசா அரசாங்கம் அரசியல் அணுகுமுறை என்பதற்கும் இவ் அறிவிப்பின் மூலம் முற்றுப்புள்ளி வைத்துள்ளது. இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, ஒரே தீர்வு இராணுவத் தீர்வுதான் என அரசாங்கம் முடிவு செய்துள்ளமையை இது காட்டுகின்றது.

அத்தோடு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் இவ் அறிவிப்பானது பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவும் எவ்வாறு இருக்கும் என்பதையும்

# தி. மு. க. விற்குள் கோஷ்டிப் பூசல்; உட்கட்சிதேர்தல்பலகொலைகள்வரைசென்றது

திராவிட முன்னேற்றக் கழகத்திற்குள் அண்மைய தேர்தலில் கட்சித் தலைவராக ஆறாவது தடவையாகவும் கருணாநிதி தெரிவு செய்யப்பட்டுள்ளார். எனினும் கட்சி கட்டுக்கோப்பாக இருந்து வருகிறது என வெளிப்பார்வைக்கு தெரிந்தாலும் தி மு க. விற்குள் கோஷ்டிப் பூசல்கள் அதிகரித்து காணப்படுகிறது.

ஒன்பதாவது தடவையாக கட்சியின் அமைப்புக்களிற்கிடையில் நடாத்தப்பட்ட தேர்தல்களின் போது [பஞ்சாயத்து யூனியன் தாலுகா மற்றும் மாவட்ட மட்டம் மொத்தம் அறுபதினாயிரம் பிரிவுகளுக்கு] பதவிகளைப் பிடிப்பதற்கு உறுப்பினர்கள் மத்தியில் காணப்பட்ட போட்டா போட்டி ஏட்டிக்குப் போட்டியான நடவடிக்கைகள் என்பவற்றினால் கட்சியில் உடைவு ஒன்றை ஏற்படுத்தி இருக்கிறது.

கட்சியில் அரைவாசிக்கும் அதிகமானோர் புதுமுகங்கள். ஆக கட்சியில் உயர்பதவி ஒன்று [தலைமைப்பதவி] கை வைக்கப்படவில்லை.

1949 இல் தி மு க. ஆரம்பிக்கப்பட்ட முதல் கட்சி அமைப்புத் தேர்தலையும் விட இம்முறை வித்தியாசமான ஒன்றாக போட்டிக் குழுக்கள் வரிந்து கட்டிக்கொண்டு ஒன்று எதிராக மற்றது செயற்பட்ட விதம்தான் இத்தகைய போட்டியால் கட்சி வேட்பாளர் மூவர் கொலை செய்யப்பட்டனர்.

எனினும் கடந்த வருடம் அ.தி.மு.க. அவையினால் மிகவும் வெட்கத்துக்குரிய தோல்வியை தி. மு. க. தழுவிக் கொண்ட பின்னரும் "கொலை செய்தேனும் பதவியை பிடித்துக் கொள்ள வேண்டும்" எனும் மனநிலையுடன் கழகத் தலைவர்கள் ஏன் போட்டியிட்டார்கள்? காரணங்கள் தான் என்ன?.

கருணாநிதி தனக்குப் பின்னர் கழகத்தின்வாரிசாக மகன் மு க ஸ்டாலினை வளர்ப்பதற்கு 1989 செப்டம்பரில் கோயாம்புத்தூரில் நடைபெற்ற இளைஞர் பேரணியில் மேற்கொண்ட பிரயத்தனம் எந்தளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது என்பதும் கேள்விக்குரிய விடயங்களே.

மேலும் தி.மு கவின் நடுத்தர மட்டத் தலைவர்கள் மத்தியில் உறங்கிக்கிடந்த விரக்தியும் அதிருப்தியும் 1988 கட்சித் தேர்தலின்போது வெளிக்கிளம்ப ஆரம்பித்தன. புதிய இரத்தத்தை கட்சிக்குஏற்றும் தந்திரோபாயத்தை கட்சியின் தலைமைத்துவம் கடைப்பிடித்த நேரம் அது. அரசியல் ரீதியில் தங்களை அப்புறப்படுத்துவதற்கான ஒரு தந்திரமே இது என்று பழைய தலைவர்கள் கருதினர். ஸ்டாலின் தலைமையிலான இளைஞர் அணியின் நிர்ப்பந்தங்களுக்கு தலைமைத்துவம் விட்டுக் கொடுத்துவிட்டது எனபழைய தலைவர்கள்வெறுப்புக்கொண்டனர்.

1989 ஜனவரியில் மீண்டும் தி.மு.க அதிகாரத்துக்கு வந்தவுடன் பல புதிய முகங்கள் அமைச்சரவைக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்ட செயல் பழைய தலைவர்களின் மனங்களை மேலும் புண்ணாக்கியது.

எனினும் 1991 ஜனவரி 30 இல் தி மு க அமைச்சரவை பதவி நீக்கப்பட்டதனைத் தொடர்ந்து படுமோசமான தோல்வியை தி.மு.க தழுவிக் கொண்டது.

கட்சி அமைப்புத் தேர்தல் தொடர்பாக மாவட்டங்களில் இருந்து வரும் செய்திகளும் கழகத்திற்குள் குழுவாதம் அப்பட்டமாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டியது கட்சித் தலைமைத்துவம் கடும் எச்சரிக்கையை விடுத்திருந்த போதும் கட்சிக் காரர்கள் பதவிகளுக்காக வன்முறைகளில் ஈடுபட்டனர் கொலைகளும் விழுந்தன.

வை. கோபாலசாமி எம்.பி. தலைமையிலான குழுவினரின் ஆதரவாளர்கள் 13 பேரும் மாவட்டச் செயலாளர்களாகவும் மு.க ஸ்டாலின் தலைமையிலான குழுவினர் 9 மாவட்டங்களில் மாவட்டச் செயலாளர்களாகவும் வெற்றி பெறமுடிந்தது ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க அரசு நீண்ட நாள் நிலைக்கப்போவதில்லை. ஊழல் நிறைந்தது. மக்களின் செல்வாக்கை இழந்து வருகிறது காற்று திசைமாறி அடிக்க ஆரம்பித்துவிட்டது என்ற எண்ணம் தி.மு க.வினர் மத்தியில் நிலவுகிறது.

கட்சிக்குள் பதவிகளைப்பிடிப்பதில் அவர்கள் காட்டிய அளவு கடந்த ஆர்வத்தையும் இந்தப் பின்னணியில் தான் பார்க்க வேண்டும் கட்சிக்குள் இப்போது பதவிகளை பிடித்துக் கொண்டால் தி.மு.க. ஆட்சிக்கு வரும்போது தங்கள் செல்வாக்கை காட்டிக் கொள்ளலாம் என்பது இவர்கள் எண்ணம்.

## அ.தி.மு.க. மாநாட்டுக்காக பிரமாண்டமான ஏற்பாடு

(சென்னை)

மதுரையில் நடைபெற இருக்கும் அ. தி. மு. க. மாநாட்டுக்காக 10 லட்சம் பேர் உட்காரும் அளவுக்கு பிரமாண்டமான பந்தல் அமைக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மதுரைரேஸ்கோர்ஸ் மைதானத்தில் அ. தி. மு. க. வின் வெற்றி மாநாடு வருகிற 28-ம் 29-ம் திகதிகளில் நடைபெற இருக்கிறது.

மாநாடு நடைபெறும்போது மின் தடை ஏற்படாமல் இருக்க கூடுதல் மின்சார இணைப்புகள் அமைக்க ஏற்பாடு செய்யப்படுவதாகவும் எந்த வகையில் முதல் அமைச்சருக்கு பாதுகாப்பு கொடுப்பது எந்தமாதிரி மேடை அமைத்தால் முதல் அமைச்சருக்கு பாதுகாப்பு பலன் உள்ளதாக இருக்கும் எனவும் இம் மாநாட்டின் ஏற்பாடுகளை கவனிக்க தமிழக அமைச்சர்கள் பலர் மதுரை சென்றுள்ளனர்.

## சுப்புலட்சுமியை பார்வையிட கருணாநிதிக்குத் தடை

(சென்னை)

பத்மநாபா கொலை வழக்கு தொடர்பாக தடா சட்டத்தின் கீழ் கைதாகி கடந்த ஆறுமாத காலமாக மதுரை சிறையில் அடைக்கப் பட்டிருக்கும் தி. மு. க. முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசனையும் அவரது கணவரையும் பார்ப்பதற்கு தி.மு.க. தலைவர் மு. கருணாநிதிக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது இது தொடர்பாக மதுரையில் கருணாநிதி கூறி இருப்பதாவது.

மதுரை மத்திய சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் சுப்புலக்ஷிமியையும் சமீபத்தில் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று மீண்டும் சிறைக்கே அழைத்துச் செல்லப்பட்டிருக்கும் கணவர் ஜெகதீசனையும் நானும் எனது மனைவியும் மகளும் சென்று பார்வையிட இருந்தோம்.

ஆனால் அதற்கு தமிழக அரசுதடை விதித்திருக்கிறது. மதுரை மாவட்ட தி. மு க. செயலர் சிறை அதிகாரியிடம் முன் அனுமதி பெறச் சென்றபோது குடும்ப உறவினர்கள் தவிர ஏனையவர்கள் சந்திக்க முன் அனுமதி கிடையாது எனத் தெரிவித்தனர்.

தடா சட்டத்தின் கீழ் கைது செய்டப்பட்ட மேற்படி இருவரையும் இரு மாதங்களுக்கு முன் மதுரையில் சந்தித்தேன். ஆனால் இப்போது என்னை சந்திக்கவிடாமல் திடீர்தடை விதித்துள்ளனர்.

நான் மதுரை வருவதனை ஒட்டித்தான் மருத்துவமனையில் இருந்து ஜெகதீஸனை வலுக்கட்டயமாக "டிஸ்சாஜ்" செய்து சிறையில் வைத்துள்ளனர். மருத்துவ மனையில் இருந்தால் நான் சென்று பார்த்து விடுவேன் என்ற கொடிய மனப்பான்மையினால் தான் அவர்கள் இப்படி நடந்து கொண்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார்

## காங்கிரசை திருப்திப் படுத்தவே தேர்தல்ஆணைக்குழு இருக்கிறது

- ஜோதிபாசு குற்றச்சாட்டு

(கல்கத்தா)

இந்திரா காங்கிரஸ் கட்சியைத் திருப்திப்படுத்தும்முகமாகவே இந்தியத் தேர்தல் ஆணைக்குழு செயல்படுகிறது என்று மேற்கு வங்காள முத...

இடம்பெற்ற இடைத்தேர்தல்களின்போது வன்முறை இடம் பெற்றதாகவும், ஆகவே 46 வோட்டுச் சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெற வேண்டும் எனத் தேர்தல் ஆணைக்குழு...

துவது என்ற தேர்தல் ஆணைக்குழுவின் முடிவு கைமீறிய வகையில் அமைந்த முடிவாகும் என்றும்,

இந்தியாவில் பாராளுமன்ற...

### இந்திய தூதரக அதிகாரிமீது

## இரண்டாவது தடவையாக கொலை முயற்சி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கராச்சி நகரிலுள்ள இந்திய தூதுவராலய அதிகாரி ஒருவரை அடையாளம் தெரியாத துப்பாக்கி ஏந்திய நபர்கள் நேற்று பட்டப் பகலில் வழி மறித்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

... கொண்டார். அங்கிருந்து காவல் நிலைய அதிகாரிகள் தாக்குதல் நடத்தியவர்களை பிடிக்க முனைந்தபோது அவர்கள் தப்பித்துக் கொண்டு விட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து ...

வடக்கு கிழக்கு இணைப்பிற்கு பிரேமதாசா அரசாங்கம் எப்பொழுதுமே பச்சைக்கொடி காட்டியதில்லை. இருப்பினும் அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டத்தையும், சமாதான முயற்சிகளுக்கான நடவடிக்கைகளையும் பிரேமதாசா அரசாங்கம் முடக்கியபோதே வடக்கு - கிழக்கு இணைப்பை எக்காரணம் கொண்டும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கப் போவதில்லை என்பது திட்டவட்டமாகத் தெரிய வந்தது.

மேலும் வடக்கு - கிழக்கு இணைப்பு ஏற்படுத்தப்பட மாட்டாது என்ற சிறிலங்கா ஜனாதிபதியின் அறிவிப்பானது இனப்பிரச்சினை குறித்து அரசாங்கத்தின் அணுகுமுறை எவ்வாறு இருக்கும் என்பதையும் தெளிவாக வெளிக்காட்டியுள்ளது. ஒருபுறம் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை. மறுபுறம் இனப்பிரச்சினைத் தீர்விற்கான அரசியல் அணுகுமுறை என்று இதுவரை கூறிவந்த பிரேமதாசா அரசாங்கம் அரசியல் அணுகுமுறை என்பதற்கும் இவ் அறிவிப்பின் மூலம் முற்றுப்புள்ளி வைத்துள்ளது. இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, ஒரே தீர்வு இராணுவத் தீர்வுதான் என அரசாங்கம் முடிவு செய்துள்ளமையை இது காட்டுகின்றது.

அத்தோடு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் இவ் அறிவிப்பானது பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முடிவும் எவ்வாறு இருக்கும் என்பதையும் கட்டியம் கூறுவது போன்று உள்ளது. இனப்பிரச்சினைத் தீர்விற்கு சிபாரிசுகளைச் செய்வதற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு செய்யும் சிபார்சுகளை எதுவித மாற்றமும் இன்றி நிறைவேற்றுவதாகக் கூறிவந்த திரு. பிரேமதாசா தற்பொழுது வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட மாட்டாது என்று தெளிவுபடக் கூறியுள்ளார். அவ்வாறானால் திரு. பிரேமதாசா பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்வுத் திட்டத்தின் ஒரு பகுதியை முன்னரே அறிவித்து விட்டாரா? அல்லது பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்குத் தனது எண்ணங்களைத் தெரிவித்து விட்டாரா? இது கேள்விக்குரியதாயினும் தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு வடக்கு - கிழக்கை இணைப்பதன் மூலம் ஓர் சமாதான முயற்சி எடுக்கப்படுவதற்கும், அதன் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வொன்று உருவாவதற்கான வாய்ப்புக்களுக்கும் பிரேமதாசா அரசாங்கம் முட்டுக்கட்டையிட்டுள்ளது என்பது உண்மை.

இதேவேளை திரு. பிரேமதாசாவின் இம்முடிவானது பெரும்பான்மையான தமிழ் மக்களைப் பொறுத்தும், அவர்களின் உரிமைக்காகப் போராடும் விடுதலைப் புலிகளைப் பொறுத்துமோ ஓர் அதிர்ச்சி தரும் விடயமாக இல்லை. அவர்களால் எதிர்பார்க்கப்பட்ட தொன்றுதான், ஆனால் பெரும்பாலும் பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் எதிர்பார்க்கப்பட்ட இம்முடிவானது சிறிலங்கா ஜனாதிபதி மூலமே வந்துவிட்டது இதுவும் நன்மைக்கே.

ஏனெனில், பாராளுமன்றத் தெரிவுக்குழுவையும், ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தையும், திரு பிரேமதாசாவையும் ஒரு அலகாகப் பார்க்காமல் தனித்தனியாகப் பார்ப்பவர்களும் இவற்றுக்கிடையிலான அரசியல் முரண்பாடுகளினால் அரசியல் லாபங்களும் கிடைக்கும் என அங்கலாய்க்கும் சில தமிழர்களும் உள்ளனர். பாராளுமன்றத் தெரிவுக்குழுவும், ஐக்கிய தேசியகட்சியும் திரு. பிரேமதாசாவை விட்டு விலகிச் செல்ல முடியாது என்பதை அவர்கள் உணருவதில்லை.

ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கில்லை என்ற திரு பிரேமதாசாவின் அறிவிப்பானது, கொழும்பில் நின்று அரசியல் நடத்துபவர்கள் பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் காலம் நீடித்துச் செல்ல செல்ல தமது அரசியலையும் நடத்திச் செல்லலாம் என எண்ணியிருந்தோருக்கு இது பேரிடியாகும்.

ஆனால் இது அவர்களின் காட்டிக் கொடுப்பு நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளிவைக்குமா என்பது சந்தேகமே. தனிநாடு கோரியவர்கள் பின்னர் ஐக்கிய இலங்கையே எமது இலட்சியம் என்ற கோசத்துடன் வடக்கு- கிழக்கு இணைந்த மாகாணசபை கோரினார்கள். தற்பொழுது அதுவும் அற்ற நிலையில் தனித்தனி மாகாணசபைகள் கோரவும் கூடும் பின்னர் அதுவும் கிடைக்காத பட்சத்தில் மாவட்டசபையையும், அதைத் தொடர்ந்து கிராமசபை கோரினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதற்கு மகாபாரதத்தை அவர்கள் உதாரணத்திற் கெடுத்தாலும் வியப்பில்லை.

---

மதுரைரேஸ்கோர்ஸ் மைதானத்தில் அ. தி. மு. க. வின் வெற்றி மாநாடு வருகிற 28-ம் 29-ம் திகதிகளில் நடைபெற இருக்கிறது.

மாநாடு நடைபெறும்போது ...சருக்கு பாதுகாப்பு பலன் உள்ளதாக இருக்கும் எனவும் இம் மாநாட்டின் ஏற்பாடுகளை கவனிக்க தமிழக அமைச்சர்கள் பலர் மதுரை சென்றுள்ளனர்.

இருந்து வரும் செய்திகளும் கழகத்திற்குள் குழுவாதம் அப்பட்டமாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டியது கட்சித் தலைமைத்துவம் கடும் எச்சரிக்கையை விடுத்திருந்த...

...லப்பட்டிருக்கும் கணவர் ஜெகதீசனையும் நானும் எனது மனைவியும் மகளும் சென்று பார்வையிட இருந்தோம்.

ஆனால் அதற்கு தமிழக ...

...மருத்துவமனையில் இருந்தால் நான் சென்று பார்த்து விடுவேன் என்ற கொடிய மனப்பான்மையினால் தான் அவர்கள் இப்படி நடந்து கொண்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

---

# காங்கிரசை திருப்திப் படுத்தவே தேர்தல்ஆணைக்குழு இருக்கிறது

**- ஜோதிபாசு குற்றச்சாட்டு**

(கல்கத்தா)

இந்திரா காங்கிரஸ் கட்சியைத் திருப்திப்படுத்தும்முகமாகவே இந்தியத் தேர்தல் ஆணைக்குழு செயல்படுகிறது என்று மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதிபாசு குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி மேற்கு வங்காளத்தில் பாலியன் சட்டப் பேரவைத் தொகுதியில் இடம்பெற்ற இடைத்தேர்தல்களின்போது வன்முறை இடம்பெற்றதாகவும், ஆகவே 46 வோட்டுச் சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெற வேண்டும் எனத் தேர்தல் ஆணைக்குழு உத்தாவிட்டதைத் தொடர்ந்து ஜோதிபாசு இதனைத் தெரிவித்துள்ளார்.

46 வோட்டுச் சாவடிகளில் மறு வாக்குப் பதிவை நடத்துவது என்ற தேர்தல் ஆணைக்குழுவின் முடிவு கைமீறிய வகையில் அமைந்த முடிவாகும் என்றும்,

இந்தியாவில் பாராளுமன்ற ஜனநாயகத்தைச் சீர்குலைக்க என்றே தேர்தல் ஆணைக்குழு முழுவீச்சில் இறங்கி இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

பாலியன் சட்டப் பேரவைத் தொகுதியின் மறு வாக்குப் பதிவு இந்த மாதம் 22 ஆம் திகதி நடைபெறும் என்றும்,

தேர்தல் ஆணைக்குழுவைச் சேர்ந்த நான்கு உறுப்பினர் விசாரணைக் குழு அறிக்கையையும், வேறு சந்தர்ப்ப சூழ்நிலைக் காரணங்களையும் கருத்திற் கொண்டு ஆராய்ந்த பின்னரே மறு வாக்குப் பதிவு நடத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டதாகவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

---

# நவாப் ஷெரீப் பிரிட்டனுக்கு நான்கு நாள் விஜயம்

(லண்டன்)

பிரிட்டனின் வெளியுறவுத்துறை அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் லண்டனில் பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீப்பை சந்தித்து பேசவுள்ளார்.

அப்போது காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் உதவுவது பற்றி பிரிட்டனின் விசனம் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்படும்என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வன்முறைகளை ஊக்குவிப்பது எவருக்கும்நன்மையளிக்காது எனக் கூறியிருக்கும் டக்ளஸ் ஹேர்ட் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண முன்வருமாறு இந்தியாவையும் பாகிஸ்தானையும் கேட்டுக்கொண்டார் என்றும் கொமன்வெல்த் அமைப்பு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளும் பிரதமர் நவாப் ஷெரிப் பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயரையும் சந்தித்துப் பேச்சு நடாத்தவுள்ளார்.

---

# பயங்கரவாத நடவடிக்கை பாகிஸ்தான் எதிர்க்கிறது

[இஸ்லாமாபாத்]

பாகிஸ்தான் சகலவிதமான பயங்கரவாத நடவடிக்கைகளையும்வன்மையாகஎதிர்ப்பதாக பாகிஸ்தானின் உயர்மட்ட ராஜதந்திரி ஒருவர் நேற்று முன்தினம் அறிவித்தார்.

இதேவேளை இந்தியாவின் பஞ்சாப் மற்றும் காஷ்மீர் மாநிலங்களில் போரிடும் தீவிரவாதிகளுக்குபாகிஸ்தான் அரசு உதவுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று கடந்த வாரத்தில் எச்சரித்து இருந்தது.

பாகிஸ்தான் இவ்விதம் செய்யாவிட்டால் பாகிஸ்தான் பயங்கரவாத சம்பவங்களை ஊக்குவிக்கும் நாடுகளின் பட்டியலில் சேர்க்கப்படும்என்றும் அமெரிக்கா கூறியிருந்தது.

---

# இந்திய - போர்த்துக்கல் கலாசார உறவு

(டில்லி)

இந்தியாவும் போர்த்துக்கலும் தமக்கிடையே பொருளாதார கலாசார உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதென முடிவு செய்து உள்ளன.

ஐரோப்பிய சமுதாயத்துடன் இந்தியா கொண்டுள்ள உறவுகளைப் புதுப்பிக்கும் வகையில் இவ் அமைப்பின் தற்போதய தலைமைநாடான போர்த்துக்கல் தொடர்ந்து பணியாற்றும்.

புவிச் சூழல் மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் நாடு திரும்பும் வழியில் லிஸ்பனில் போர்த்துக்கல் அதிபருடன் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் பேச்சு நடத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

---

# வெடி விபத்தில் ஐவர் பலி

(டில்லி)

குவைற்றில் வெடி மருந்து சேமிப்பு சாலைகளை துலக்கும் பணியில் ஈடுபட்டிருந்த நான்கு இந்தியர்களும். ஒரு பிரித்தானியபிரஜையும் அங்கு இடம் பெற்ற வெடி விபத்தினால் உயிர் இழந்தனர். எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வளைகுடாப் போரின் போது ஈராக்கால் குவைற்றில் இந்தச் சேமிப்புச் சாலை விட்டுச் செல்லப் பட்டிருந்தது

---

# ரஷ்ய ஜனாதிபதி அமெரிக்கா விஜயம்

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுடன் பேச்சுக்கள் நடத்துவதற்காகவும், இருதரப்பு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்காகவும் ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் நேற்று முன்தினம்வாஷிங்டன் போய்ச்சேர்ந்துள்ளார்.

---

இந்திய தூதரக அதிகாரிமீது

# இரண்டாவது தடவையாக கொலை முயற்சி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கராச்சி நகரிலுள்ள இந்திய தூதுவராக அதிகாரி ஒருவரை அடையாளம் தெரியாத துப்பாக்கி ஏந்திய நபர்கள் நேற்று பட்டப் பகலில் வழி மறித்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கராச்சி இந்திய தூதுவரக அலுவலகத்தில் பணியாற்றும் சிறீவாத்சவா என்பவரே தாக்குதலுக்கு உள்ளானவர் ஆவார். சிறீவாத்சவா பயணம் செய்து கொண்டிருந்த காரும் இத்தாக்குதலின் போது சேதமடைந்தது. மூன்று முறை துப்பாக்கியாளர்கள் தாக்குதல் நடத்திய போது அதிலிருந்துஅதிஷ்டவசமாக தப்பிய சிறீவாத்சவா அருகிலிருந்த காவல் நிலையம் ஒன்றிற்குள் புகுந்து அடைக்கலம் தேடிக் கொண்டார். அங்கிருந்து காவல் நிலைய அதிகாரிகள் தாக்குதல் நடத்தியவர்களை பிடிக்க முனைந்தபோது அவர்கள் தப்பித்துக் கொண்டு விட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து இஸ்லாமாபாத்தில் இருக்கும் இந்தியத்தூதுவர் எஸ். கே. லம்பா பாகிஸ்தான் அரசிடம் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஒரு மாதகாலத்தில் சிறீவாத்சவா இத்தகைய தாக்குதலுக்கு இலக்கானது இது இரண்டாவது தடவையாகும். இது தவிர இந்தியத் தூதுவரக அதிகாரியானராஜேஷ்மித்தல் பாகிஸ்தான் புலனாய்வு அதிகாரிகளால் கடத்தப்பட்டு தாக்கப் பட்டதாக செய்திகள் வந்தமை தெரிந்ததே.

---

விகாரையின் புனரமைப்பிற்கு

# சீன அரசின் உதவிக்கு பிரேமா அழைப்பு

(கொழும்பு)

அபயகிரி விகாரையின் கட்டுமானப் பணியின் நிர்மானப் பொறுப்பையேற்க முன்வருமாறு சீன அரசாங்கத்திடம் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அபயகிரி விகாரையில் பொசன் பண்டிகையை முன்னிட்டு 60 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட மகா இஸ்ஸ பாகியன் கட்டடத் தொகுதியைத் திறந்துவைத்த பின் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டுபேசிய அவர் மேலும் கூறுகையில், சீனா சிறிலங்காவிற்கு அளித்த உதவிகள் பெறுமதி மிக்கவை எனக் குறிப்பிட்டார். பண்டாரநாயக்கஞாபகார்த்தசர்வதேச மாநாட்டு மண்டபம், நீதிமன்றக் கட்டட வளாகம் மற்றும் பல நீர்ப்பாசன விவசாயத் திட்டங்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவையாகும். இவ்விடத்தில் சீன அரசு நிதி உதவிகளை மட்டுமல்ல தொழிலநுட்ப உதவிகளையும் நல்கியது என்பது கவனிக்கத்தக்கது. மிக அழகான இக் கட்டடத் தொகுதியின் பெறுமதியை ரூபாவிலும் சதத்திலும் மதிப்பிட்டுவிடமுடியாது என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் நான் சீனாவுக்குச்சென்றிருந்தபோது பாகியனின் இலங்கை விஜயம்பற்றியும் சீனத் தலைவர்களுக்கு ஞாபகமூட்டினேன். பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே சீனாவுடன் இந்நாடு கொண்டிருந்த உறவுகளையும் எடுத்துகாட்டினேன், இவை கலாசார ரீதியானவை மட்டுமல்ல பொருளாதார ரீதியானவையும் கூட.

---

## உமியைப்பாவித்து மின்சாரம்

(டில்லி)

உமியை எரிபொருளாக பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்திசெய்யும்நிலையமொன்று பஞ்சாபில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது இந்தமாதிரியான முறை உலகிலேயே இது தான் முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழநாதம்

# எனது பதவிக் காலத்தில் கறுப்புப் பூனைகள் இல்லை

-லலித்

[மாத்தறை]

நான் பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது ''கறுப்பு பூனைகள்'' இருந்ததாக சிலர் என்மீது இப்போது பழி சுமத்தப் பார்க்கிறார்கள். அவர்கள் இதுபற்றி நன்றாக தேடிப் பார்க்கட்டும் இது விஷயத்தில் எந்த நேரமும் விசாரணைக்கு முன்வர நான் தயாராகத்தான் இருக்கிறேன்.

காலி சமனல பாலத்துக்கு அருகில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினரின் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்ட லலித் அத்துலத்முதலி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று கறுப்புப் பூனைகளுடன் என்னை இணைத்துப் பேசுபவர்கள் யாராக இருந்தாலும் நாம் பதவிக்கு வந்ததும் அவர்களை ஆணைக்குழு முன் நிறுத்தி விசாரணைசெய்வோம்

எம் மீது பல ஊழல்களை சுமத்திசேறுபூச சிலர் முயன்று வருகிறார்கள் ஆனால் என் மீது எந்தக் குற்றச்சாட்டையும் சுமத்த முடியாது நான் பதவியிலிருந்தபோது பரிசுத்தமாகவே நடந்துள்ளேன்

இன்று இந்த நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை சிங்கள இளைஞர்களை மட்டும் வாட்டவில்லை அனைத்து இன இளைஞர்களையுமே இப்பிரச்சினை பாதித்துள்ளது எனத் தெரிவித்தார்.

## தியாகிகளுக்கு சிலைஎழுப்ப கருங்கல் போதாது

-காமினி திசாநாயக்கா

(கொழும்பு)

நியாயத்திற்காக போராடி மிகக்கொடிய முறையில் கொலைசெய்யப்பட்ட தியாகிகளுக்கு சிலை எழுப்ப முற்பட்டால் இந்த நாட்டிலுள்ள கருங்கற்கள் அனைத்தும் போதாதாக இருக்கும் என காலியில் சமனலபாலத்துக்கருகில் நடைபெற்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினரின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய கட்சியின் தலைவரான காமினிதிசாநாயக்கா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் நாம் அரசியல் துறையில் பலவாறு மோதிக்கொண்ட போதிலும் கொலைசெய்வதற்காக எந்தச்சந்தர்ப்பத்திலும் ஒத்துழைக்கவுமில்லை ஆதரவு வழங்கவுமில்லை

எமது கட்சி வேறொரு கட்சியுடன் கூட்டுச்சேராது. எமது அரசியல் பரிசுத்தமான ஜனநாயகரீதியில் ஆட்சியைத் தேடிச்செல்வது இதனை நாம் எமது கட்சிக்குள் செயல்படுத்தி வருகிறோம். இன்று இந்த நாட்டில் அரசியல் ஒழுக்கம் பாதாள உலகைப்போய் சேர்ந்துவிட்டது.

மேலும் பாராளுமன்றத்தில் உடுகம் பொலவின் பிரச்சினை குறித்து பேசமுடியாது போனால் அதையிட்டுப் பேசுவதற்கு வேறு இடமே இல்லை இதனை பொறுப்பு வாய்ந்தோர் அறிந்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

### பால்குடிக்க

நினைத்து இந்தச் சிறுமி குடித்து விட்டாராம்.

சிறிது நேரத்தில் வாந்தி எடுத்து பண்டாரவளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது விஷம் கடுமையாகி விட்டதால் சிறுமி துடிதுடித்து மரணத்தை தழுவிக் கொண்டார்.

## உரம் எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்குத் தேவையான விவசாய உர வகைகளை எடுத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி உர வகைகளுக்குத் தேவையான முற்பணம் செலுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. இவ்விடயம் குறித்து யாழ். அரசாங்க அதிபர் உரக் கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருக்கிறார். (க), (ச)

# தாயக வளத்தை அறிவதில் இந்நூல் பயன் தரும்

-யோகரட்ணம் யோகி

(யாழ்ப்பாணம்)

நமது மண்ணில் இருக்கும் வளத்தைக் கண்டு கொள்ளாமலும், அவற்றை பயன்படுத்தாமலும் இருக்கின்ற அதே வேளை அந்நிய மோகத்திற்கு ஆட்பட்டு எமது மண்ணின் மேல் அவநம்பிக்கை கொள்பவர்களுக்கு இந்நூல் தகுந்த போதனைகளை வழங்கும் என்று திரு. யோகரட்ணம் யோகி தெரிவித்தார்.

நேற்று மாலை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் உணவுத் தேவையும் எமது உற்பத்தி இலக்குகளும் என்னும் கைந்நூலின் அறிமுகவுரையை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்; நவீன தொழில்நுட்பங்கள் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளும் அதேசமயம் பண்டைய வாழ்க்கை முறையில் ஈடுபடவும் தயாராக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் வெளியீடான இந்நூலை பொறுப்பாளர் ரவி வெளியிடுவைக்க முதற்பிரதியை திரு இளங்குமரன் பெற்றுக் கொண்டார்.

யாழ் மாவட்ட தமிழீழ ஆய்வுநிறுவனப் பொறுப்பாளர் சௌரி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் டாக்டர் எம் கே. முருகானந்தன். ஓய்வு பெற்ற விவசாய அதியட்சகர் விஜயரட்ணம், பல்கலைக்கழக விரிவுரையாளர் கந்தையா உட்படப் பலர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

## யாழ். ஆஸ்பத்திரியில் புதிய கண்சிகிச்சைப் பிரிவு

(நமது நிருபர்)

யாழ் போதனா வைத்தியசாலையில் புதிய கண்சிகிச்சை பிரிவு ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து பல மாதங்களாக இருந்து வந்த பல இடர்பாடுகள் நீங்கியுள்ளன

இரவு பகலாக நீண்ட வரிசையில் காத்திருந்து நோயாளர் கண்சிகிச்சையைப் பெற்று வந்தது தெரிந்ததே.

கடந்த வாரம் முதல் யாழ் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைநிலைய மேல்மாடியில் புதிய கிளை ஒன்று ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது நாளாந்தம் நூறு நோயாளர் வரை இலகுவாக சிகிச்சை பெறக்கூடியதாக உள்ளது.

சாதாரண கண் சிகிச்சை பெறுவோருக்கு அதற்கான சிகிச்சைகள் அங்கு வைத்தே மேற்கொள்ளப்படுகிறது அவசர நோயாளர்கள் மட்டும் கண் சிகிச்சை நிபுணரிடம் சிகிச்சைபெற அனுமதிக்கப்படுகின்றனர்.

இப்புதிய திட்டத்தினால் நாளாந்தம் பெருமளவு கண் நோயாளர் சிகிச்சை பெறக் கூடியதாக இருப்பதுடன் அன்றைய தினம் காலை ஆறு மணிக்கு வந்தே துண்டு எடுக்கக்கூடிய நிலையும் தற்போது உருவாகியுள்ளது [ ]

### அதிபர்கள் அவசரக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலை அதிபர்களுக்குமான அவசரக்கூட்டம் ஒன்று இன்று வியாழக்கிழமை மாலை இரண்டு மணிக்குப் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் இடம்பெயர்ந்துள்ள பாடசாலைகள் நிலைமை, மாணவர்களுக்கான சீருடை விநியோகம், மாணவ உணவு முத்திரை வழங்கல் போன்ற முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் அதிபர்கள் தவறாது சமுகமளிக்க வேண்டுமென கோட்டக் கல்விப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. சி வே. மகேசவேலு கேட்டுள்ளார். (ச)

### நெல்லிப்பழை

## வைத்தியசாலையை மீண்டும் இயங்க வைக்க முயற்சி

(நமது நிருபர்)

சிறிலங்கா இராணுவத்தினரால் அழிக்கப்பட்ட தெல்லிப்பழை அரசினர் மருத்துவமனையை மீண்டும் இயங்க வைக்கும் முயற்சியில் வைத்தியசாலை வட்டாரங்கள் ஈடுபட்டுள்ளன.

கடந்த 31 ஆம் திகதி வலி வடக்கில் சிறிலங்கா விமானப் படை விமானங்கள் நடாத்திய மூர்க்கத்தனமான குண்டு வீச்சுத்தாக்குதல்களினால் ஆலயங்கள், வைத்தியசாலைகள், வீடுகள், கடைகள்பல பலத்தசேதமடைந்ததும் பல கொல்லப்பட்டதும் தெரிந்ததே

அன்றையதினம் மல்லாகம் கிராம அபிவிருத்திசங்க கட்டடத்தில் இயங்கிவந்த தெல்லிப்பழை வைத்தியசாலை தாக்குதலுக்கு இலக்காகியது காட்டப்பட்டதைத் தொடர்ந்தே இதனை மீள ஆரம்பிப்பது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆயினும் இதன் ஒரு பகுதி கிளினிக்குகள் மனிப்பாய் கிறீன் மருத்துவமனையின் ஓர் பகுதியில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது ச)

## நிதிக்கம்பனி முதலீடுகள் மீளக்கிடைப்பது பற்றி அச்சம்

(கொழும்பு)

வங்குரோத்தான சில நிதிக் கம்பனிகளில் ஆயுட்கால வைப்பாக நிதி முதலிட்டவர்கள் மத்தியில அந்தப் பணம் திரும்பக் கிடைக்குமா என்பது குறித்து அச்சம் தோன்றியுள்ளது

புறப்பட்டி றேடர்ஸ், காசிப் பினான்ஸ் கம்பனி, ஹிறேகி பினான்ஸ் ஆகிய மூன்று நிதிக் கம்பனிகள் மீதும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் யுனைடட் ட்ரஸ்ட் அன்ட்

## உலர் உணவு பொருள்களை பெற்றுக் கொள்ளவும்

வேலணை ப.நோ.கூ. சங்கத்தில் ஆனி மாதத்துடன் கணக்காய்வுகள் நடைபெறவுள்ளதால் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆனி மாதத்திற்கான நான்கு வார உலர் உணவு பொருட்களை இம் மாதம் 23-ம் திகதிக்கு முன்னதாக பெற்றுக்கொள்ளுமாறு வேலணை சங்க பாவனையாளர் அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (88)

## அலுவலர் கவனத்திற்கு

அலுவலரின் வசதி கருதி எதிர்வரும் 19-ம் திகதி ஜூன் மாதத்திலிருந்து வதிரியில் அலுவலர்களிற்கான அனுமதி வழங்கும் புதிய அலுவலகம் ஒன்று இயங்கவுள்ளது 19-ம் திகதியில் இருந்து அலுவலர்கள் தமக்கான அனுமதிகளை இவ்வலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் வடபகுதிக்குள் நுழைவோர் தமது நுழைவோர்

## பதவி வெற்றிடங்கள்

பிரபலமான நிறுவனம் ஒன்றினால் பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) உதவிக் கணக்காளர்
(2) உதவிக் கணக்காய்வாளர்
(3) கணக்கு லிகிதர்
(4) காசாளர்
(5) உதவிக் களஞ்சியப் பொறுப்பாளர்
(6) தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்தாளர்

(1) உதவிக் கணக்காளர்

(2) உதவிக்கணக்காய்வாளர் -தகைமைகள்

(அ) (I C. A - INTERMEDIATE) பட்டயக் கணக்காளர் (நடுப்பகுதி)

(ஆ) (I C M. A - PARTS 1 To 3) பட்டயக் கணக்காளர் பகுதி 1 - 3

(இ) (B. Com ) வர்த்தகமாணி பட்டதாரி

(3) கணக்கு லிகிதர் - தகைமைகள்

க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் கணக்கியல் உட்பட ஆகக் குறைந்தது 3 வர்த்தகப் பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(4) காசாளர் - தகைமைகள்

க பொ. த (சாதாரணம்) - எண்கணிதம்/கணக்கியலில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். பிணைப்பணம் கட்டவேண்டும்.

அவர் தொடர்ந்து பேசுகை யில் நாம் அரசியல் துறையில் பலவாறு மோதிக்கொண்ட போதிலும் கொலைசெய்வ தற்காக எந்தச்சந்தர்ப்பத்தி லும் ஒத்துழைக்கவுமில்லை ஆதரவு வழங்கவுமில்லை

எமது கட்சி வேறொரு கட்சியுடன் கூட்டுச்சேராது. எமது அரசியல் பரிசுத்தமான ஜன நாயகரீதியில் ஆட்சியைத்

பால்குடிக்க நினைத்து இந்தச் சிறுமி குடித்து விட்டாராம்.

சிறிது நேரத்தில் வாந்தி எடுத்து பண்டாரவளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது விஷம் கடுமையாகி விட்டதால் சிறுமி துடிதுடித்து மரணத்தை தழுவிக் கொண்டார்.

## அலுவலர் கவனத்திற்கு

அலுவலரின் வசதி கருதி எதிர்வரும் 19-ம் திகதி ஜூன் மாதத்திலிருந்து வதிரியில் அலுவலர்களிற்கான அனுமதி வழங்கும் புதிய அலுவலகம் ஒன்று இயங்கவுள்ளது 19-ம் திகதியில் இருந்து அலுவலர்கள் தமக்கான அனுமதிகளை இவ்வலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் வடபகுதிக்குள் நுழைவோர் தமது நுழைவோர் அட்டைகளை இவ் அலுவலகத்தில் புதுப்பித்துக்கொள்ள முடியும் என்பதனை அறியத்தருகின்றோம்

போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்,

(2694)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும்



மலர்வு 29-03.1965

உதிர்வு 18 05-1992

### முத்துசாமி குமார் (ரஞ்சித்)

பாசத்தின் உறைவிடமாய்
இல்லத்தின் குலவிளக்காய்
தேசத்தின் வழிகாட்டியாய்
எம்மிதயங்களில் குடிகொண்டாய்
மாதமொன்று கழிந்தண்ணா
உன் நினைவலைகள் நீங்கவில்லை
எம் இதயங்களில் என்றும் வாழ்கின்றாய்

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

இடம்:
நாதன் குடியேற்றத்திட்டம்,
புன்னநீராவி,
விஸ்வமடு, முல்லைத்தீவு.

குறிப்பு;
அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் எமது இல்லத்தில் இன்று 18-06-1992 வியாழக்கிழமை காலை 10மணிக்கு ஆரம்பித்து நடைபெறும். இதில் உற்றார் உறவினர் நண்பர்கள் சகோதரர்கள் அனைவரும் இந்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து அமுதருந்தி ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (/2690)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

(நமது நிருபர்)

சிறிலங்கா இராணுவத்தினரால் அழிக்கப்பட்ட தெல்லிப்பழை அரசினர் மருத்துவமனையை மீண்டும் இயங்க வைக்கும் முயற்சியில் வைத்தியசாலை வட்டாரங்கள் ஈடுபட்டுள்ளன.

கடந்த 31 ஆம் திகதி வலிவடக்கில் சிறிலங்கா விமானப் படை விமானங்கள் நடாத்திய மூர்க்கத்தனமான குண்டு வீச்சுத்தாக்குதல்களினால் ஆலயங்கள், வைத்தியசாலைகள், வீடுகள், கடைகள்பல பலத்தசேதமடைந்ததும் பல கொல்லப்பட்டதும் தெரிந்ததே

அன்றையதினம் மல்லாகம் கிராம அபிவிருத்திசங்க கட்டடத்தில் இயங்கிவந்த தெல்லிப்பழை மருத்துவமனையும் குண்டுவீச்சுக்கு இலக்காகித் தரை மட்டமானதும் தெரிந்ததே.

இதில் இயங்கிவந்த விசேட சிகிச்சைப் பிரிவுகளை மீண்டும் வேறு இடத்தில் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளே தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தாக்குதல்களைத் தொடர்ந்து வைத்தியசாலை இயங்க முடியாத நிலை உருவானதால் பெருந்தொகையான நோயாளர் பெரும் சிரமத்திற்குள்ளாகியிருப்பது சுட்டிக் காட்டப்பட்டதைத் தொடர்ந்தே இதனை மீள ஆரம்பிப்பது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆயினும் இதன் ஒரு பகுதி கிளினிக்குகள் மனிப்பாய் கிறீன் மருத்துவமனையின் ஓர் பகுதியில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது (ச)

நிலைமை, மாணவர்களுக்கான சீருடை விநியோகம், மாணவ உணவு முத்திரை வழங்கல் போன்ற முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் அதிபர்கள் தவறாது சமுகமளிக்க வேண்டுமென கோட்டக் கல்விப் பிரதிகல்விப் பணிப்பாளர் திரு. சி வே. மகேசவேலு கேட்டுள்ளார். (ச)

## நிதிக்கம்பனி முதலீடுகள் மீளக்கிடைப்பது பற்றி அச்சம்

(கொழும்பு)

வங்குரோத்தான சில நிதிக் கம்பனிகளில் ஆயுட்கால வைப்பாக நிதி முதலிட்டவர்கள் மத்தியில அந்தப் பணம் திரும்பக் கிடைக்குமா என்பது குறித்து அச்சம் தோன்றியுள்ளது

வங்கியல்லாத நிதிக்கம்பனிகளை மேற்பார்வை செய்யும் மத்திய வங்கியின் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிடுகையில், கவுஸ், அன்ட் புறப்பட்டி றேடரீஸ், காசிப் பினான்ஸ் கம்பனி, ஹிறேகி பினான்ஸ் ஆகிய மூன்று நிதிக் கம்பனிகள் மீதும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் யுனைட்டட் ட்ரஸ்ட் அன்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (யு.ரி.ஐ) யுனைட்டட் மோட்டர்ஸ் பினான்ஸ், செவன பினான்ஸ், ஹேம் பினான்ஸ் ஆகிய நிதிக்கம்பனிகளும் வங்குரோத்தான நிதிக் கம்பனிகள் ஆகும் எனவும் தெரிவித்தார்.

### ராஜீவ் கொலை

## உளவு ஸ்தாபனங்கள் தடுத்திருக்கலாமாம்

ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்படாமல் உளவறியும் தாபனங்கள் தடுத்திருக்கலாம் என்று வர்மா ஆணைக்குழு தனது அறிக்கையில குறிப்பிட்டுள்ளது

ராஜீவ் காந்தியை கொலை செய்த சம்பவத்திற்கு வழிவகுத்திட்ட பாதுகாப்புக்குறைபாடுகள் பற்றி விசாரணை செய்து வந்த இந்த ஆணைக்குழு கடந்த திங்கட் கிழமை தனது அறிக்கையை இந்திய அரசிடம் சமர்ப்பித்திருந்தது தெரிந்ததே.

### தலவாக்கலை தோட்ட

## விவசாயக் காணிகளை ஒப்படைக்கப் பணிப்பு

தலவாக்கலை பகுதியில் தோட்டத் தொழிலாளர்கள் தாம் விவசாயம் செய்யும் காணிகளை வரும் 30ஆம் திகதிக்குள் தோட்ட நிர்வாகத்திடம் கையளிக்க வேண்டும் என நுவரெலியா மேலதிக அரசாங்க அதிபர் தோட்ட நிர்வாகங்களுக்கூடாக அறிவுறுத்தியுள்ளதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் கவலை அடைந்துள்ளனர்

இது குறித்து இ. தொ. கா தலவாக்கலை மாநில தொழிலுறவு அதிகாரி எஸ் ரெங்கநாதன் கருத்துத் தெரிவிக்கும்போது'' மேற்படி தொழிலாளர்கள் கடந்த பலவருடங்களாக இக்காணிகளில் விவசாயம் செய்து வருகின்றனர். பலர் பரம்பரைபரம்பரையாக விவசாயம் செய்பவர்களாவர்.

### நிவாரணத்தை

விடயம் தொடர்பான பதில் கிடைத்ததும் இவ்விடயத்தில் தாம் நடவடிக்கையில் இறங்க முடியும் என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். (க)

### இலங்கை

படுகிறது.

இக்கடை கனடா றொறன்ரோவில் மிட்லண்ட் அவெனியூவிற்கு கிழக்காக உள்ள எலெஸ்மோர் அவெனியூ என்ற இடத்திலேயே உள்ளது.

## விமானம் நோட்டம்

நேற்று நண்பகலில் வந்த இரு அவ்ரோ விமானங்கள் யாழ். நகரின் சில பகுதிகளை சுற்றி பலமுறை நோட்டமிட்டுச் சென்றன.

நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணத்தின் கச்சேரி, அரியாலை, பூம்புகார் மற்றும் இவற்றினை அண்டிய பகுதிகளை பலமுறை சுற்றி மேற்படி விமானங்கள் நோட்டமிட்டுச் சென்றன. [பா]

### மாதம்

பர் திரு. சேதுகாவலர் நேற்று கொழும்புசென்றுள்ளார். இவர் கொழும்பு தபால் திணைக்கள உயர் அதிகாரிகளையும். சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

(ச),(க),(பா)

## சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

தற்போதைச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு வடமராட்சி பரியோவான் முதலுதவிப் படையினருக்கு விசேட கூட்டங்கள் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## மண்ணெண்ணெய் திடீர் விலை உயர்வு

யாழ் நகரப் பகுதியில் நேற்று மண்ணெண்ணெய் திடீரென விலை உயர்ந்ததைதொடர்ந்து நுகர்வோர் பொருள் கொள்வனவுக்காக நகரப்பகுதியில் நீண்ட வரிசையில் நின்றதை காணக் கூடியதாய் இருந்தது.

இதேவேளை நேற்று மாலை வரை குடா நாட்டின் சில பகுதிகளில் 40 ரூபாய் விலையில் விற்பனை செய்தனர் மொத்த வியாபாரிகளால் விற்கப்பட்ட மண்ணெண்ணெய் யாவும் பதுக்கப்பட்டன.(05)

(6) தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்தாளர்

(1) உதவிக் கணக்காளர்

(2) உதவிக்கணக்காய்வாளர் - தகைமைகள்

(அ) (I C. A - INTERMEDIATE) பட்டயக் கணக்காளர் (நடுப்பகுதி)

(ஆ) (I C M. A - PARTS 1 To 3) பட்டயக் கணக்காளர் பகுதி 1 - 3

(இ) (B. Com ) வர்த்தகமாணி பட்டதாரி

(3) கணக்கு லிகிதர் - தகைமைகள்

க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் கணக்கியல் உட்பட ஆகக் குறைந்தது 3 வர்த்தகப் பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(4) காசாளர் - தகைமைகள்

க பொ. த (சாதாரணம்) - எண்கணிதம்/கணக்கியலில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். பிணைப்பணம் கட்டவேண்டும்.

(5) உதவிக் களஞ்சியப் பொறுப்பாளர் தகைமைகள்

க. பொ. த (சாதாரணம்) - எண்கணிதம்/கணக்கியலில் திறமைச்சித்தி பெற்றிருத்தல்வேண்டும்.

(6) தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்தாளர் - தகைமைகள்

க. பொ. த (சாதாரணம்) பரீட்சையில் தமிழ் விசேட சித்தி, அங்கீகரிக்கப்பட்ட சுருக்கெழுத்து /தடடெழுத்து பரீட்சையில் சித்தி.

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்போர் குறைந்த பட்சம் 3 வருட தொழில் அனுபவம் கொண்டவர்களாக இருத்தல் விரும்பத்தக்கது.

விண்ணப்பங்கள்

விளம்பர இலக்கம், 300
மே/பா ஈழநாதம,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு 25-06-1992 க்கு முன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(சி/ 4570)

## வாகன வரிசை இலக்கம் 17 06-1992

சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகன வரிசை இலக்கம்:-4417

சோதனை நிலையத்தைத் தாண்டிச்சென்ற இறுதி வாகன வரிசை இலக்கம்:-3650

இராணுவம் அனுமதித்த இறுதி வாகன வரிசை இலக்கம்:-3580

வடபகுதிக்கு வெளியே செல்ல இராணுவம் அனுமதித்த வாகன இலக்கம்:-

28-1677 42-9112 24-8364 28-9677, 27-9153, 26-2272 26 84?7 26-6983, 27-5045 41-5597, 28 6623. 26-2867 41-8557. 42-2595 25-3674 26-1432, 22-8861 26-5167 42-1320 4?-9652. 24-5145 24-576, 26-1919, 24-422. 26-675, 24-5846. 41-4418 24-6949. 25-140, 25-8805.

வட பகுதிக்கு உள்ளே செல்ல அனுமதித்த வாகன இல:

24-7340 24-4726. 28-1110 24-5529. 40-1214, 28-8054 24-5238, 24-7623, 26-3722, 27-5535, 42-488, 24-4560

சர்வதேச செஞ்சிலுவைக் குழு வாகனம் 22